# ‘ஓடும் நதி புதினம்’ காட்டும் பெண்ணியச்சிக்கல்கள்

சு.நர்மதாதேவி
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்த்துறை)
சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஒட்டன்சத்திரம்

**முன்னுரை**

இன்றைய படைப்புகளில் பல்வேறு சிக்கல்கள் மையமிட்டு கவிஞர்களால் படைக்கப்படுகின்றன. பல்வேறு சிக்கல்கள் சமுதாயத்தில் காணப்பட்டாலும் பெண்ணியச் சிக்கல்களை சுட்டிக்காட்டுவது இன்றைய தேவையாக உள்ளன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நசுக்கப்பட்ட பெண்ணியம் விழித்தெழ முற்பட்டாலும் மீண்டும் மேலெழ முடியாமல் ஆண்மேலாதிக்கச் சமுதாயம் தடுக்கிறது. ஆண்களால் ஒடுக்கப்படும் பெண்கள் எண்ணற்ற சிக்கல்களுக்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ ஆட்படுகிறாள். பெண் தனது சுயமரியாதை மற்றும் சுய உணர்வையும் இழக்க வேண்டும் என்று சமுதாயமும் எதிர்பார்க்கிறது. இத்தகைய எதிர்பார்ப்புகளிடையே பெண்கள் பல்வேறு சிக்கல்களில் அகப்பட்டு அதில் இருந்து மீள முடியாமல் வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களை யதாத்தங்களோடு ‘ஓடும் நதி புதினம்’ காட்டுகிறது. இந்நாவல் வழியே பெண்களுக்கு ஏற்படும் பல்வேறு சிக்கல்களை பெண்ணியப் பார்வை கொண்டு சமுதாயச்சிக்கல், குடும்பச்சிக்கல், பாலியல் சிக்கல் என்ற பிரிவுகளில் ஆராய்வதை நோக்கமாக்குகிறது.

**பெண்ணியம்**

காலமாற்றத்திற்கேற்ப சமூகத்திலும் மாற்றங்கள் ஏற்படுதல் இயற்கையாகும். பெண்கள் ஆணுக்கு நிகராக சமஉரிமை பெறவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. பெண்ணியம் என்பது பெண் அனைத்து உரிமைகளையும் பெற்று சமுதாயத்தில் மரியாதைக்குரியவளாக வாழ வகை செய்தல் ஆகும். சென்னைபல்கலைக்கழக ஆங்கில தமிழ் பேரகராதி “Feminism என்பதற்கு ‘பெண் உரிமை ஏற்ற கோட்பாடு’, பெண் உரிமை ஆதரவு” என்று பொருள் கூறுகிறது.

க.பஞ்சாங்கம் “ஆணாதிக்க சமுதாய மரபில் ஒரு பெண், பெண்ணாக பிறந்த காரணத்தினால், அடக்கி ஆளப்பட்டிருக்கிறாள். அடக்குவதின் வழி அவள் ஆற்றல் சிதைக்கப்பட்டிருக்கிறது. சமூகத்தில் பல சமூக காரணிகளால் ஒதுக்கப்பட்டிருக்கிறாள் இத்தகைய பிரச்சினைகளை வெளிப்படுத்திப் பெண்களின் முன்னேற்றம் கருதி எழுந்த இயக்கம் பெண்ணியம் ஆகும்.” எனவே பெண்ணியம் என்பது பெண்கள் மரியாதையுடனும், பொறுப்புடனும் மகிழ்வாக வாழ வழிவகை செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது எனலாம்.

**சிக்கல் விளக்கம்**

மனிதர்கள் ஒன்றுசேர்ந்து குழுக்களாக வாழ முற்படும்போது சமூகம் தோன்றியது. ஓவ்வொரு சமூகமும் தனக்கென சில கொள்கைகளையும், மரபுகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இச்சமுதாய கோட்பாட்டோடு தனிமனிதர்கள் ஒன்றுபட்டும் முரண்பட்டும் வாழும் சூழல் ஏற்படுகிறது. ஒன்றுபட்டு வாழும்போது அமைதியும் முரண்பட்டு வாழும்போது சிக்கலும் தோன்றுகிறது. எனினும் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பிலிருந்து இறப்புவரை அவன் வாழும் சமூகத்தின் பாதுகாப்பு தேவையாகிறது. எனவே சிக்கல்களை எதிர்கொண்டு வாழவேண்டிய சூழல் தவிர்க்க இயலாததாகும்.

தற்காலத் தமிழ் அகராதி “சிக்கல் என்ற சொல்லுக்கு எளிமையாக இல்லாதது சுலபமாகத் தொடர்புபடுத்த முடியாத பல கூறுகளைக் கொண்ட தன்மை Complex > Complication தீர்வு காண முடியாத பிரச்சினை Problem> Difficulty" எனப் பொருள் உரைக்கிறது.

"உணர்வு நிலையில் உள்ளத்திற்குக் கசப்பையும்,எரிச்சலையும்,குழப்பத்தையும் உண்டாக்கும் இவ்வுணர்ச்சி உள்ளத்தைப் பெரிதும் தாக்கி ஆறாப்புண்ணை உண்டாக்காமல் இருக்க நனவு உள்ளத்தில் இருந்து நனவிலி உள்ளத்திற்கு தள்ளிவிடப்படும்போது சிக்கலாக மாறுகிறது" என்று வாழ்வியல்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

சிக்கல் என்பது பெரும்பாலும் மனவெழுச்சி பற்றிய சிக்கலையே குறிக்கும். 'யுங்' எனும் உளப்பகுப்பாளர் முதலில் இச்சொல்லைப் பயன்படுத்தினார். பின்னர் பல்வேறு துறைகளிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. "பொதுவாக மனவெழுச்சி சார்ந்த அமுக்கப்பட்ட அல்லது ஆழப்புதைக்கப்பட்ட கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் குறிக்க சிக்கல் எனும் சொல்லைப் பயன்படுத்துகிறோம்" என்று விளக்கம் தருகிறது. எனவே சிக்கல் என்பது ஒருவர் தன்னுடைய வாழ்வில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வை மறக்க முற்பட்டாலும் அவரால் மறக்க இயலாமல் இருப்பதையே சிக்கல் என்று குறிப்படலாம்.

**சிக்கலின் வகைகள்**

சிக்கலின் தன்மைக்கேற்ப சிக்கல்களை ஆய்வாளர்கள் பல வகைகளாகப் பிரிக்கின்றனர்

வாழ்வியல்களஞ்சியம் "ஒரு மனிதன் சிக்கலில் அகப்பட்டுத் தவிப்பது தனிமனிதச் சிக்கல் என்றும் பலமக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ சிக்கலினால் துன்பப்படுவது சமூகச்சிக்கல் என்றும் சொல்லப்படுகிறது"

ஆ.இசக்கியம்மாள் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை "பெண்களின் வாழ்க்கைச் சூழலை ஆராய்கின்ற பொழுது பெண்ணுக்கு ஏற்படும் மனச்சிக்கலை 'உடலியற்சிக்கல்', 'உளவியற்சிக்கல்', சமூகச்சிக்கல்' என மூவகைப்படுத்தி ஆராயலாம்" என்கிறார்.

இதன் அடிப்படையில் ஓடும்நதி புதினத்தில் வரும் முதன்மைக் கதை மாந்தரான செல்லம்மிணியின் வாழ்வில் முடிவுற்றுத் தொடரும் பல்வேறு சிக்கல்களைக் கீழ்வரும் பிரிவுகளில் ஆராயப்படுகிறது.

தனிமனிதச் சிக்கல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல் 'பெண்ணியச் சிக்கல்' என்று அழைக்கப்படுகிறது. எனவே மேற்குறிப்பிட்ட செய்திகளில் இருந்து சிக்கல்களை தனிமனிதச் சிக்கல், சமூகச் சிக்கல், பாலியல் சிக்கல், திருமணச் சிக்கல், உடலியல் சிக்கல், உளவியல் சிக்கல் எனப் பல வகைகளாக வகைப்படுத்தலாம்.

இச்சிக்கல்கள் வாழ்க்கையையே போராட்டமாக்குகிறது. இச்சிக்கலை எதிர்கொண்டு வெற்றி கொள்வதும் தோல்வியடைந்தால் துன்பம் அடைவதும் வாழ்வில் மாறி மாறி அமைகின்றன. ஒரு சிலர் சிக்கலில் அகப்பட்டு அடுத்தடுத்து முடிவுகளை எடுப்பதில் சிரமம் ஏற்படுகிறது. ஓடும்நதி புதினத்திலும் செல்லம்மிணி சிக்கலுக்குள் அடைப்பட்டு அதிலிருந்து வெளிவருவதற்குள் அவள் அடையும் துன்பங்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகிறது.

**குடும்பம்**

குடும்பம் என்பது உறவுகள் ஒன்றுகூடும் இடமாகும். ஏனெனில் குடும்பமே ஒருவரோடு ஒருவர் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள என்று நெருக்கமான உறவுடையதாகும். குடும்பம் என்னும் சமூக அமைப்பின் தன்மைகளைக் கீழ்வருமாறு கருத்துக் கூறுகின்றனர்.

"குடும்பம் என்பதை ஆங்கிலத்தில் பேமிலி (Family) என்ற சொல்லால் குறிப்பிடுவர். இச்சொல் பேமுலஸ் (Famulous) என்ற சொல்லில் இருந்து உருப்பெற்றது என்பர்"

"Familia என்றால் ஒருவருக்கு சொந்தமான அடிமைகளின் மொத்தத்தொகை என்று பொருள்"

"குடும்பம் என்பதைக் குறிப்பிடும் பேமிலி என்ற சொல் ஆண்டான் அடிமைகள் அடங்கிய ஒரு சிறுகுழுவைக் குறித்ததாகத் தெரிய வருகின்றது" எனும் கருத்தை நா.செல்வராசு கையாண்டுள்ளார்.

**குடும்பச்சிக்கல்**

குடும்ப அமைப்பில் கணவன் தலைவனாகவும்,மனைவி தலைவியாகவும் விளங்குகின்றனர். குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் பெற்றோர்களுக்கு உண்டு இந்தக் குடும்ப அமைப்பில் முரண்பாடு தோன்றும்போது சிக்கல்கள் தோன்றுகின்றன. குடும்பத்தில் சிக்கலினால் ஆணைவிடப் பெண்ணே மிகுந்த அளவில் பாதிக்கப்படுகிறார்.

ஓடும்நதி புதினத்தில் செல்லம்மிணி பாதுகாப்பில்லாமல் தனியாக இருக்கிறாள். எனவே சமூகத்தில் பெண்கள் துணையில்லாமல் தனியாக வாழமுடியாத அவல நிலையையே இப்புதினமும் சுட்டுகிறது. இதன் மூலம் பெண்களுக்கு வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பின்மை இருப்பதை உணரலாம்.

"மணிமேகலையில் சுதமதி தனியே மலர்கொய்து கொண்டிருந்தாள் அவளை தூக்கிச் செல்லுதல்" "இராமாயணத்தில் சீதை தனியே வனத்தில் இருக்கும்போது அவள் பர்ணகசாலையோடு தூக்கிச் சென்றதாக கம்பர் கூறுகிறார்".

என்ற இருகூற்றுகளும் அக்காலம் தொட்டு இக்காலம்வரை சமூகத்தில் பெண் என்பவள் தனியாக இருக்கமுடியாத சூழல் நிலவியதை அறியலாம். மேலும் ஆண்சமுதாயம் பெண்ணை போகப்பொருளாகவே சித்தரிப்பதை உணரலாம். எனவே இக்கூற்றுக்கள் பெண்களுக்கு பாதுகாப்பின்மை இருப்பதை உறுதி செய்கிறது.

"பெண்களுக்கு வீட்டில் பாதுகாப்பு குறைவு என்பது உண்மை. அதுவும் தனியாக இருக்கும் பெண்களுக்குப் பாதுகாப்பின்மை அதிகம்"

"பால் உணர்வைப் பொறுத்தவரை ஆண் கொஞ்சம் இயற்கைச் சுதந்திரம் பெற்றவன். பெண் இயற்கையிலேயே எச்சரிக்கப்பட்டவள்" எனவே தனியாக இருக்கும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதையும் ஆண் சமுதாயம் பெண்ணைப் போகப்பொருளாகவே சித்தரிப்பதை உணரலாம்.

**சமூகம்**

சொஸைட்டி என்னும் ஆங்கிலச்சொல் சொலைட்டாஸ் என்ற இலத்தின் மொழியிலிருந்து உருவாக்கப்பட்டது. தமிழில் சொஸைட்டி என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக சமூகம் என்ற சொல் உருவாக்கப்பட்டது.

வாழ்வியல்களஞ்சியம் "சமுதாயம் என்ற சொல்லைச் சமூகவியலார் ஆங்கிலத்தில் கம்யூனிட்டி என்கின்றனர். ஒரு சிறிய நிலப்பரப்பில் ஓர் பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றி கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும்" என்ற விளக்கத்தை தருகின்றது.

**சமுதாயச்சிக்கல்**

சமூகச்சிக்கல் சமூகத்தில் வாழும் ஆண்,பெண்,குழந்தைகள் என்ற அனைவருக்குமே ஏற்படுகின்றது. ஆனால் நடைமுறையில் ஆணைவிட ஒரு பெண் அதிகமாக பாதிக்கப்படுவதை காண முடிகின்றது.

செல்லம்மிணிக்கு ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் என்ற மூடநம்பிக்கை பின்பற்றப்பட்டு அவள் வாழ்வில் சிக்கலைத் தோற்றுவிக்கிறது. ஆண்,பெண் என்ற இரண்டு கண்கள் இருக்க அவற்றில் ஒன்றிற்கு மட்டுமே தோஷம் என்று கூறுவது சரியாகுமா?

“செவ்வாய் தோஷம் உயிரைப் போக்க வாய்ப்பு அமைக்குமா? ஓடிப்போய் மறைந்து வாழ வைக்குமா என்பதாய் அவளின் கவலை அமைந்தது. கவலையே இரண்டாடுகளைக் கடத்திக் கொண்டு போயிற்று” (ஓடும்நதி-83) என்ற புதினத்தின் வாயிலாக பெண்களுக்குள்ள சிக்கலை எடுத்துக்காட்டியுள்ளார்.

எனவே காலங்காலமாக பெண்களின் மேல் போர்த்தப்பட்டு வந்த மூடநம்பிக்கைகளைப் பற்றி அவள் அவற்றைப் பற்றி பேசுவதற்கு கூட வாய்ப்பு கிடைக்காமல் தன்மனதுக்குள்ளேயே கூறிக்கொள்வதன் மூலம் உரிமைகள் மறுக்கப்பட்டதை அறிஞர்கள் கூற்றும் அதனையே உறுதிப்படுத்துகின்றன.

**காதல் சிக்கல்**

காதல் என்பது ஆண், பெண் இருவரும் உள்ளத்தால் ஒன்றுபடுவதைக் குறிக்கும். உள்ளத்தால் ஒன்றுபட்ட செல்லம்மிணி தன்னுடைய காதலருடன் வெளியூர் சென்று வாழ்கிறாள். ஆனால் அவன் அவளை வீட்டில் தனியே விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார்.

சமூகத்தில் ஆண்கள் காதல் என்ற பெயரில் பெண்களை ஏமாற்றுவதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“நளவெண்பாவில் கூட நளன் தன்மனைவியை காட்டில் தனியேவிட்டுச் செல்லுதல்”

இப்புராணச் செய்தியும், ஆய்வின் நாவலும் காலங்காலமாகப் பெண்கள் ஆண்களால் ஏமாற்றப்படுவதையும் அவர்களது வாழ்வு சிக்கலில் மூழ்குவதையும் சுட்டிக்காட்டுகின்றன.

**திருமணச் சிக்கல்**

திருமணம் என்பது இருமணமும் இணைந்து நடைபெற வேண்டியது. ஆனால் செல்லமிணியின் விருப்பத்தை அறியாமலே திருமணம் நடப்பதை,

“புருஷனுடன் வாழாதவள் சூன்யக்காரி”

“சூன்யக்காரிகள் இந்த ஒலகத்திலெ இருக்கக் கூடாது”

“உலகம் பூராவும் இப்போ இருக்கிற நெலயில
இருக்கறதுக்குக் காரணம் சூன்யக்காரிகௌல்லா
எரிச்சு சாம்பலாகிட்டதுதா அவங்க இல்லாமெ

இருக்கிற உலகம் சுத்தமா இருக்கும், அழகா இருக்கும்” (ஓடும்நதி-195) என்ற ஊராரின் பேச்சுகள் அவளை பேசாமடந்தையாக்குகிறது. இது போன்ற சிக்கல்கள் சமூகத்திலும் நிலவுகிறதை இப்புதினம் படம்பிடித்துக் காட்டுகிறது.

“திருமணம் என்பது மனிதனுக்காக மனிதனால் நடத்தப்படும் சடங்கு”

எனவே திருமணம் என்பது இருவரின் விருப்பத்தை அறியாமலே நடத்தப்படுவதால் ஆணைவிடப் பெண்ணே சிக்கலுக்கு உள்ளாகிறாள். இதனையே,

சிலப்பதிகாரத்திலும் கண்ணகி,கோவலன் இருவரின் திருமணம் பெரியோர்களால் முடிவு செய்யப்படுகிறது. ஆனால் கண்ணகி,கோவலன் ஆகியோரிடம் இத்திருமணத்திற்குரிய விருப்பம் அறியப்பட்டதா? இல்லையா? என்ற செய்தி கூறப்படவில்லை இருவரது பெற்றோரின் விருப்படி திருமண நிகழ்வுகள் நிகழ்ந்து முடிவதாகக் காட்டப்படுகிறது. இதற்குச் சான்று,

**“இருபெரும் குரவரும் ஒருபெரு நாளால்
மணஅணி காண மகிழ்ந்தனர்”**

(சிலம்பு: புகார். மங்கல. அடி 40-41)

எனவே அக்காலம் முதல் இக்காலம் வரை இருவரின் மனப்பொருத்தம் என்பது அறியாமலே திருமணம் நிகழ்ந்துள்ளதை சிலப்பதிகாரமும் காட்டுகிறது.

“ஆணுக்கும் பெண்ணுக்கும் மணப்பொருத்தம் எழுதி இருக்கிறார்கள். நல்ல குடும்பம்,நல்ல ஜாதி என்று பத்துப் பொருத்தம் எழுதி இதெல்லாம் பெண்ணுக்குத்தான், ஆண்களுக்கு குறைந்தாலும் கூடினாலும் தப்பு இல்லை என்று எழுதி இருக்கிறார்கள்;. இது எப்படிச் சரியாகும்? விதியென்று வகுத்தால் அது ஆணுக்கும் பெண்ணுக்கும் நிகராகத் தானே இருக்க வேண்டும்” என்று பிரபஞ்சன் குறிப்பிடுகிறார்.

**கணவன்- மனைவி உறவுச்சிக்கல்**

இல்லத்தில் கணவன் - மனைவி இருவரும் இணைந்து வாழ்வதே திருமணம். அதைப்போலவே செல்லம்மிணி தனது கணவருடன் சேர்ந்து மட்டுமே வாழ்கிறாள். மனத்தால் இருவரும் இணைந்து வாழவில்லை. அதைக் கூட பிறரிடம் கூற இயலாமல் தன் மனதுக்குள்ளேயே,

“இப்போதிருப்பதும் விதவைக் கோலம் போலத்தான்.ஆனாலும் புருஷன் என்று ஒருவன் இருப்பது ஆறுதலானது என்பதை செல்லம்மிணி உணர்ந்திருந்தாள்” (ஓடும்நதி-5)

ரங்கண்ணன் குடிகாரனாக இருந்தாலும் அவனோடு வாழ்வதே வாழ்வு என்று வாழ்ந்தாள். சமூதாயத்தில் பெரும்பான்மையான பெண்களின் நிலையை புதினத்தின் வாயிலாக குறிப்பிடுகிறார்.

“வசிஷ்டர் என்பவர் மற்றொரு சட்ட நிபுணர் ஆவார். அபஸ்தம்பாவின் வழி பெண்ணடிமைத் தனத்தை வளர்த்தவர். பெண் தனித்து இயங்கக் கூடியவள் அல்லள்; ஆடவனே அவளுக்கு முதலாளி” என்று எடுத்துரைத்தார் எனவே பெண்ணுக்கு கணவனே துணை. “கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்” என்ற பழமொழியின் படியே பெண்ணின்வாழ்வு அமைந்துள்ளதையே சுட்டுகிறது.

“மனுசாஸ்திரம் மனைவி கணவனை எப்போதும் கடவுளாக நினைத்துப் போற்ற வேண்டும் என்றும், அவன் நற்பண்புகள் இல்லாதவனாக இருந்தாலும் அவனை வழிபடல் வேண்டும் என்றும் மனு எடுத்துரைக்கிறர். மேலும் பெண்ணாக பிறந்தவள் எந்நிலையிலும் ஆணுக்கு அடிமையே என்று விதி அமைத்தார். ஒரு பெண் குழந்தைப்பருவத்தில் தந்தைக்கும், மங்கைப்பருத்தில் கணவனுக்கும், கணவனை இழந்தபின் மகனுக்கும் அடிமை என்றும் அவர் ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று வகுத்துப் பெண்ணடிமைத் தனத்தை சட்டமாக்கினார்.”

எனவே பெண் என்பவள் பிறப்பு முதல் இறப்பு வரை அடிமையாக வாழ வேண்டும் என்றும் அவளது உரிமைகள் மறுக்கப்பட்டதை மேற்குறிப்பிட்ட கூற்று உறுதிப்படுத்தப்படுகிறது.

**என் வாழ்வு - என் இலக்கு**
**தீர்மானிக்க, நிர்ணயிக்க உரிமை இல்லையா எனக்கு**
**.................................................**
**ஆணாதிக்கச் சமூகத்தின் தோள்களில்**
**பிணமாய் ஊர்வலம் போவது**
**என்வாழ்வு தான்”** என்று கவிஞர் சுபத்ரா குறிப்பிடுகிறார்

மேலே குறிப்பிட்ட கூற்றுக்கள் கணவனின் செயல்கள் முரண்பாடாக மனைவிக்குத் தோன்றினாலும் கணவனை முதலாளியாகவும், மனைவியை அடிமையாகவும் சித்திரிக்கும் போக்கும் இன்றளவும் சமூகத்தில் நிலவுகிறது. இச்சிக்கலைச் சுட்டிக்காட்டவே மேற்கண்ட கூற்றுக்கள் சான்றாகின.

**பாலியல் வன்முறை**

பெண்கள் மென்மையான பண்பு கொண்டவர்களாகவும், தன்னை போகப் பொருளாக எண்ணி நுகரவிரும்பும் ராஜேஸ்குமாரை எதிர்த்து குரல் கொடுத்தாலும் பாதிக்கப்படுவது தன்னுடைய வாழ்வு தான் என்பதை செல்லம்மிணி நன்கு உணர்ந்திருந்தாள் எனவே அவள் அவனிடம்

**"எதுக்கு இங்கே வர்றே"**

**"என் வாழ்க்கை சீரழிஞ்சதுக்கு முதல் காரணம்ன்னு நீதா ஆனே"**

**"அய்யோ ........... உனக்கு எப்படிப் புரிய வைக்கிறது?**

**ஆனா உனக்கு நல்ல சாவு வராது. உளுந்து சாவே பாரு. என்னைக் காரணமில்லாமே இம்சை பண்றே..........** என் சாபம் உன்னெ சும்மா உடாது" (ஓடும்நதி -259)

என்று அழுகையைத் தெருவில் காட்ட முடியவில்லை. வீட்டிற்குள் சென்று கதவை அடைத்து சமையல் அறையில் உட்கார்ந்து அழுதாள்.

எனவே பெண் என்பவள் தன்னுடைய மனக்கதறலைக் கூட பிறர் அறிய வெளிப்படுத்த முடியா சூழ்நிலையில் உள்ள சமூதாயத்தின் நிலையை செல்லமிணியின் வாயிலாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பெண் என்பவள் போகப் பொருள் மட்டுமன்று. ஆணாதிக்கச் சமூதாயத்தால் அடக்குமுறை ஒடுக்குமுறை சக்திகளினால் மதிப்புகள் நசுக்கப்படுகின்றன." (கவிஞர் அப்துல்ரகுமான்)

"பெண் உரிமையை இழப்பதற்கு முதன்மைக்காரணம் பாலின வேறுபாடு - பெண்கள் படிக்கும் வயதில் தந்தையின் கட்டுப்பாடு வாழ்நாள் முழுவதும் கட்டுண்ட வாழ்க்கை வாழ்வதே பெண்களுக்கு அழகு என்கிறது சமூகம்" (கவிஞர் அப்துல்ரகுமான்)

**"வயிற்றுப்பசி மிகுந்தவன் அவளிடமிருந்து பொன் பொருளைப் பறிக்க வருகிறான். உடல் பசி மிகுந்தவன் அவளையே கொள்ளை கொள்ள வருகிறான். ஒரு பெண், பொன் நகைகளை வேண்டுமானால் கொள்ளைகாரனுக்குப் பயந்து வீட்டிலே கழற்றி வைத்து விட்டு வரலாம். இறைவன் வழங்கியுள்ள பெண்மையைச் சூறையாடக் காத்திருக்கும் கொள்ளைக்காரர்களிடமிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்வது எப்படி?" (பெண்ணே நீ வாழ்க - 42)**

"சிந்தாமணி பெண்மையை வெறும் போகப் பொருளாகவே சித்தரிக்கின்றது"

எனவே பெண்கள் ஆண்களின் பார்வையில் போகப் பொருளாகவே எண்ணுகின்றனர் என்பதை அறிஞர்களின் கூற்றுக்கள் வலுசேர்க்கின்றன.

"ஒரு பெண் மாற்றான் தன் முகத்தை நோக்கினான் என்பதற்காகத் தன்முகத்தை குரங்கு முகமாக மாற்றிக் கொண்டாள்" மணிமேகலை

"பொருள்வயின் பிரிந்த கணவன் வரும் தன் உருவத்தைக் கல்லாக்கிக் கொண்டாள்" மணிமேகலை

இக்கூற்றுக்கள் அனைத்தும் பெண் ஆடவனின் நுகர்வுக் கலாச்சார பிடியில் சிக்கிக்கொள்வதில் இருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டாள் என்பதை அறியலாம். எனவே சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் பெண்களின் மீதான தவறான பார்வையைச் சுட்டிக்காட்டி அதற்கான சான்றுகளும் அதையே பிரதிபலிக்கின்றன.

**முடிவுரை**

காலங்கள் மாறினாலும் பெண்களின் மீது காட்டப்படும் பேதம் மட்டும் மாறுவதில்லை ஆணாதிக்கச் சமூகத்தால் பெண்ணின் மீது திணிக்கப்படும் கோட்பாடுகளால் அவள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறாள். மேலும் அவள் குழந்தைப் பருவத்தில் இருந்து இறக்கும் காலம் வரை பெண் என்பவள் தன் உள்ளக்கருத்தை வெளிப்படுத்த இயலாநிலையில் தன் மனதுக்குள்ளேயே நெருப்பில் விழுந்த புழுவாய் துடிக்கிறாள். மேலும் தன்வாழ்நாள் முழுவதும் பிறரால் ஆட்டிவைக்கப்படும் மரப்பாவையாகவே வாழ்கிறாள். பெண்கள் மீது போர்த்தப்பட்ட இத்தகைய மரபுரீதியான கூண்டுக்குள் இருந்து வெளிவர இயலாமல் குடும்பம், பாலியல், கணவன்-மனைவி உறவுச்சிக்கல் என பல்வேறு சிக்கல்களுக்குள் அகப்பட்டு அவளது வாழ்வே சூன்யமாகிறது. எனவே பெண்களை அறியாமை எனும் இருளில் சிக்குண்டு வாழ வேண்டும் என்று ஆணாதிக்க சமூதாயம்

எதிர்பார்க்கிறது. சமூகக் கோட்பாடுகளில் பாலின பேதம் வழியாகப் பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதை ஓடும்நதி புதினத்தில் கதை மாந்தரான செல்லம்மிணியின் வாயிலாகச் சமூகத்தில் புரையோடிக்கிடந்த பெண்ணியச்சிக்கல்களை இக்கட்டுரையின் வாயிலாக ஆராய்ந்தோம்.

**பார்வை நூல்கள்**

1. சுப்ரபாரதிமணியன், ஓடும்நதி
2. எம்.பி.நிர்மல், சர்வசக்தீ
3. கோமதி சுப்ரமணியம், பெண்ணே நீ வாழ்க
4. பிரேமா.இரா, பெண் மரபியலும் இலக்கியத்திலும்
5. இரா.பிரேமா, பெண்ணியம் -
6. தி.கமலி, பெண்ணியப் படைப்பிலக்கியம்